பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

21 JAN 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 07 திங்கட்கிழமை (20-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 54

# குஜ்ரால் விஜயத்தின் பின் இந்தியா தீர்வு முயற்சி குறித்து முடிவு செய்யும்

## பிரதமர் தேவகௌடா அறிவிப்பு

**சென்னை, ஜனவரி 20**

**இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் இலங்கை சென்று வந்த பின்னரே இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான புதிய முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.**

**இந்தியப் பிரதமர் தேவகௌடா தமிழ்நாடு தலைநகர் சென்னையில் நேற்று மாலை இவ்வாறு தெரிவித்தார்.**

சென்னையில் சில நிகழ்ச்சி களில் பங்குபற்றுவதற்காக ஒருநாள் பயணமாக பிரத மர் தேவகௌடா நேற்று சென்னை வந்திருந்தார்.

நேற்று மாலை அங்கிருந்து பெங்களூர் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் சென்னை விமான நிலையத் தில் செய்தியாளர்களை பிர தமர் கௌடா சந்தித்தார். அப்போதே இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற் கான புதிய முயற்சிகள் குஜ் ராலின் இலங்கை விஜயத் தின் பின் மேற்கொள்ளப் படும் என்று அவர் சொன் னார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையின ரால் தொடர்ந்து தாக்கப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியஸ்தம் வகிக்க நோர்வே தயார்!

கொழும்பு, ஜன. 20

இலங்கை இனப்பிரச்சி னைக்குத் தீர்வு காண்பதற் கான சமாதானப் பேச்சு வார்த்தைகளில் மத்தியஸ் தம் வகிக்க நோர்வே அர சாங்கம் தயாராக இருக் கிறது. ஆனால் பிரச்சினை யில் சம்பந்தப்பட்ட இருதரப் பினரும் விரும்பிக் கேட்கும் பட்சத்தில்தான் பேச்சுவார்த் தைக்கான சகல அனுசரணை களையும் நோர்வே வழங்கும்.

நோர்வே வெளிநாட்ட மைச்சின் மேலதிக செயலா ளர் நீட் வெய்லக் மட்டக் களப்பு மாவட்ட செயலகத் தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற திணைக்களத் தலை வர்கள் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு அரச அதி பர் திரு. ஏ. கே. பத்மநாதன் தலைமையில் இந்த மாநாடு இடம்பெற்றது.

(உ-150-3)

### பரந்தன் தாக்குதல்:

## 2 மேஜர் ஜெனரல்கள் விசாரணை நடத்துவர்

கொழும்பு, ஜன. 20

ஆனையிறவு, பரந்தன் பகு திகளில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து விசாரிப்பதற்கு இரு மேஜர் ஜெனரல்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஈ. எச். சமரதுங்க, மேஜர் ஜெனரல் லயனல் பலகெல்ல ஆகி யோரே இதற்காக நியமிக்கப் பட்டுள்ளனர்.

மேஜர் ஜெனரல் ஈ. எச். சமரதுங்க வடக்கு நடவடிக் கைக்குப் பொறுப்பான பிர திக் கட்டளைத் தளபதியா வார்.

மேஜர் ஜெனரல் லயனல் பலகெல்ல யாழ். தலைமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப ...... தலையீட்டு விவ காரம் தலையிடி விவகாரம் எண்டு சொல்லுங்கோ ..... !

## சந்திரிகா - குஜ்ரால் நேற்று சந்திப்பு

கொழும்பு, ஜன. 20

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ் ரால் நேற்று மாலை அலரி மாளிகையில் ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்கவை சந் தித்து உரையாடினார்.

இலங்கைக்கான 4 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றுப் பிற் பகல் கொழும்பு வந்து சேர்ந்த அவரை பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமர் வரவேற்றார்.

கொழும்பில் இன்று ஆரம்ப மாகும் இந்திய — இலங்கைக் கூட்டு ஆணைக்குழுவின் 3 ஆவது கூட்டத் தொடரில் குஜ்ரால் இணைத் தலைவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பரந்தன் தாக்குதல்

## படையினரின் இழப்புகள் குறித்து இன்னும் கணக்கிட முடியாத நிலை

கொழும்பு, ஜன. 20

பரந்தன் தாக்குதலின் போது இறந்தமற்றும்காணா மற் போன படையினரின் எண்ணிக்கையை இன்னும் கணக்கிட முடியாத நிலையி லேயே படையினர் உள்ள தாக 'சண்டே ரைம்ஸ்' ஆங் கில வார இதழ் நேற்றுத் தக வல் வெளியிட்டுள்ளது.

இதுவரை நடந்த விசார ணைகளில் இருந்து ஐந்து கப்டன்கள்உட்பட 223படை யினர் இறந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளால்செஞ் சிலுவைச் சங்கத்தின் வவு னியா கிளையிடம் ஒப்ப டைக்கப்பட்ட 29 படையின ரின் சடலங்கள் இதில் சேர்க் கப்படவில்லை.

படை அதிகாரிகளின் தகவ லின்படி 197 புலிகள் கொல் லப்பட்டுள்ளனர். பரந்த னைப் படையினர் மீளக் கைப்பற்றிய பின்னர் எழுபது அழுகிய சடலங்களைக் கண் டெடுத்தனர். அச் சடலங்கள் பெண்கள் உடையவை என் பதால் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளின் சட லங்களாக அவை இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது —

இப்படி அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(உ-3-150)

## இந்தியத் தலையீட்டை குஜ்ராலிடம் ஐந்து தமிழ்க்கட்சிகள் கோரும்

கொழும்பு, ஜன. 20

இலங்கையில் இன்றுள்ள சூழ்நிலையில் இந்தியா தலை யிடுவதன் மூலமே இனப்பிரச் சினைக்குத் தீர்வு காண முடி யும் என்று இந்திய வெளியு றவு அமைச்சர் குஜ்ராலிடம் வலியுறுத்துவதென ஐந்து தமிழ்க் கட்சிகள் முடிவு செய் துள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். செய லாளர் நாயகம் சுரேஷ் பிரே மச்சந்திரன் இத் தகவலை வெளியிட்டார்.

இலங்கை இனப் பிரச்சினை விடயத்தில் தீர்வு காண்ப பற்கு இந்தியா உதவ வேண் டும் என்று இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ் ராலிடம் கோரிக்கை விடுப் பது என கொழும்பில் நேற்று முன்தினம் கூடிய ஐந்து தமிழ்க் கட்சிகள் முடிவு செய் துள்ளன என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

(உ-3)

## வவுனியா அகதிகளுக்காக உண்ணாவிரதப் போராட்டம்

### புளொட் அமைப்பு ஏற்பாடு

வவுனியா தடுப்பு முகாம் களில் தடுத்து வைக்கப்பட் டுள்ள அகதி மக்களின் நிலை மோசமடைவதால், அவர் களின் நலனைக் காப்பாற்று வதற்காக உண்ணாவிரதப் போரர்ட்டம் ஒன்றை ஆரம் பிப்பதற்கு 'புளொட்' அமைப்பு திட்டமிட்டுள்ளது.

அந்த அமைப்பின் தலை வர் த. சித்தார்த்தன் இத்தக வலைத் தெரிவித்துள்ளார்,

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு பெறும் வகையில் தமிழ்க்கட்சிகளுடன் தாம் பேச்சு நடத்தி வருவதாக வும் —

அரச சார்பற்ற தொண் டர் அமைப்புக்கள் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன என் றும் —

அவர் 'சண்டேலீடர்' பத் திரிகைக்கு தெரிவித்துள் ளார்.

வவுனியா அகதிகள் விட யத்தில் அரசு மீது நம்பிக்கை இழந்து விட்டோம் என்று ஈ. பி.ஆர். எல். எவ். செயலா ளர் நாயகம் [illegible] தெரிவித்தார். (உ-3-150)

### இலங்கை இனப்பிரச்சினை:

## தலையிட முடியாது எனக்கூறி இந்தியா ஒதுங்கிவிட முடியாது

### 'சண்டே ரைம்ஸ்' கருத்து

கொழும்பு, ஜன, 20

''இலங்கை இனப்பிரச்சி னையில் தலையிடமாட் டோம் என்று இந்தியா கூற முடியாது. இனப்பிரச்சி னையை மோசமாக்கிய இந் தியாவே அதனைத் தீர்க்க வும் உதவவேண்டும்''— இப் படி 'சண்டே ரைம்ஸ்' பத்தி ரிகை ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது.

'இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ் ரால் இலங்கை வரும்போது, இனப்பிரச்சினை பற்றிப் பேச மாட்டார். அது அந்த நாட் டின் உள்நாட்டுப் பிரச் சினை'' — என்று இந்தியா கூறியுள்ளது.

இது போதாது. உள்நாட் டுப் பிரச்சினையான இனப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் ஆயுதக் கப்பலை தேடிய வேவு விமானமே மாயமானது!

கொழும்பு, ஜன.20

விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று ஆயுதங்களுடன் இலங்கை நோக்கி வருவதாகக் கிடைத்த தகவலை அடுத்து அக்கப்பலைத் தேடி வேவு பார்த்த சமயமே ஊர்காவற்றுறைக்கு மேலால் பறந்து கொண்டிருந்தபோது வேவு விமானம் காணாமற் போயுள்ளது என்றுகொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

வவுனியாவில் இருந்து புறப்பட்டு ஊர்காவற்றுறைக்கு மேலாகப் பறந்த சமயம் காணாமற் போன இந்த வேவு விமானத்தை தேடுவதற்கு கடற்படையினரின் உதவி நாடப்பட்டுள்ளது.

இஸ்ரேலிடம் இருந்து 90 லட்சம் அமெரிக்க டொலருக்கு வாங்கப்பட்ட ''றிமோட் கொண்ட்ரோல்'' ரக வேவு விமானங்களில் ஒன்றே காணாமற் போயுள்ளது.

இந்த விமானம் சுமார் 7 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து படம் எடுக்கக் கூடியது. 7 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தவாறு கீழே வீதியில் சென்று கொண்டிருக்கும் மோட்டார் சைக்கிள் ஒன்றின் இலக்கத்தைக் கூட துல்லியமாகப் படம் எடுத்து-பதிவு செய்து — தகவல் தரக்கூடிய வல்லமையுடையது இந்த விமானம்.

இந்த வேவு விமானம் பூநகரிப் பகுதியில் விழுந்து நொருங்கியதாக இலங்கை அரசு முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே. (உ-3-150)

# வடமராட்சியில் நேற்று கண் சிகிச்சை முகாம்

வடமராட்சி, ஜன. 20

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர் ஏற்பாடு செய்த கண் சிகிச்சை முகாம் நேற்று மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

எனினும் யாழ்ப்பாணத்தில் இருந்து டாக்டர்கள் வந்து சேர்வதில் பிரயாணத்தில் உண்டான தடங்கல்கள் காரணமாக, எதிர்பார்த்ததை விடக் குறைவானோருக்கே சிகிச்சை அளிக்கப்பட்டது.

காலை 8 மணிக்கு ஆரம்பமாவதற்குஏற்பாடாகிஇருந்த போதிலும் யாழ்ப்பாணத்திலிருந்து டாக்டர்கள் நண்பகல் 12-45 மணி அளவிலேயே வந்து சேர்ந்தனர்.

டாக்டர்கள் வந்து சேர்வதில் காலதாமதம் ஏற்பட்டதால் சிகிச்சைக்கென வந்த பலர் வீடு திரும்பி விட்டனர். நேற்று கண் சிகிச்சை பெற முடியாதவர்களுக்கு வெகு விரைவில் மற்றொரு திகதியில் அதற்கான வசதிசெய்து கொடுக்கப்படும் என்று வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் அறிவித்தார்.

இக்கண் சிகிச்சை முகாமில் யாழ். போதனா வைத்தியசாலை கண் வைத்தியர் டாக்டர் யோகநாதன் சிகிச்சை அளித்தார். சிகிச்சைக்குட்படுத்தப்பட்டவர்களில் விழி வெண்படல் (கற்றாக்) சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்படவேண்டியவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சிகிச்சைக்குட்படுத்தப்பட்டவர்களில் கண்ணாடி பெற வேண்டியவர்களுள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் நோயாளர்களுக்கு கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

கண்சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட அனைவருக்கும் இரத்த அழுத்தம், நீரிழிவு பரிசோதனைகளும் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை, யாழ், போதனா வைத்தியசாலைகளைச் சேர்ந்த டாக்டர்களால் மேற்கொள்ளப்பட்டன.

(அ-173-15)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி கதிரவேலு

மீசாலை வேம்பிராயை பிறப்பிடமாகவும், உருத்திரபுரம் நீவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கதிரவேலு (17-01-97) வெள்ளிக்கிழமை சிவப்பேறு அடைந்தார்.

இவர் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி — தெய்வானை தம்பதிகளின் தவப்புதல்வனும், அமரர் கணபதி — செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகாமசுந்தரி, கருணகிரி (றியாத்), சூரியகுமாரி (கிளி/இந்துக் கல்லூரி ஆசிரியை), குமுத மனோகரி, சுவேந்திரன், காலஞ் சென்ற சதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும்' க. வே. இராசதுரை (மீசாலை வீரசிங்கம் ம. வி. ஆசிரியர்), இராசேந்திரம் (கிளி/இந்துக் கல்லூரி பாதுகாவலர்), அமரர் ஆனந்த நடராசா (A. K. R. உரிமையாளர்), நந்தகுமாரி ஆகியோரின் மாமனாரும், மகேஸ்வரி, சின்னமணி, இராஜேஸ்வரி, தம்பு, தனபாலசிங்கம், குணபாலசிங்கம், குலவீரசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிருஜன், மேருதிகா, தர்மதர்சனன், சமீதா, கஸ்தூரி, பார்த்தீபன், பார்த்தீபா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (18 - 01 - 97) சனிக்கிழமை நீவில் மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றேன்.

தகவல்:-
க. வே. இராசதுரை
(மருமகன்)

''காமினி மீகாரம்'',
மீசாலை வடக்கு,
மீசாலை.

(44778)

## சிங்கராசா சிவராசா (தம்பு)

(சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்க முன்னாள் ஊழியர்)

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையைச் சேர்ந்த சிங்கராசா சிவராசா 19-1 97 – இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சிங்கராசா தம்பதிகளின் ஏக புதல்வனும், பொன்மணியின் அன்புக் கணவரும், திருமதி ம. சரஸ்வதி, திருமதி ச. சிவக்கொழுந்து (டென்மார்க்), திருமதி ம. திலகவதி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. சி. மகாலிங்கம், திரு. ந. சண்முகசுந்தரம், திரு. க. மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற செல்வன் ம. புவேந்தன், செல்வி ம. திவ்வியா, செல்வன் ம. திசோமன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (20-01-97) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. பொன்மணி
(மனைவி)

(சி/3959)

# நன்றி நவிலல்

எனது அன்புச் சகோதரி
அமரர்
செல்வி செபஸ்ரி மேரி திரேசா

அவர்களின் மறைவையொட்டி —

எம்மில்லம் வந்து அனுதாபம் தெரிவித்த குரவர்கள், கன்னியர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும், செபவழிபாடுகள் நடத்திய பல்வேறு குழுவினருக்கும், மலர் வளையங்கள் சாத்தியும், அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபத்தைத் தெரிவித்தோருக்கும் —

எமது வேண்டுகோளை ஏற்று இரங்கற் திருப்பலியும் ஏனைய சடங்குகளும் சிறப்பாக நடந்தேற உதவிய அருட்தந்தையர்களுக்கும், பீடப்பணியாளருக்கும், பாடகர்குழாம், இளைஞர் உருவாக்கல் இயக்க அங்கத்தவர்களுக்கும் மற்றும் ஆலயப் பணியாளருக்கும் இறுதி ஊர்வலம் சிறக்க உதவியோருக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கேற்ற அன்பர்கள் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

செ. டோமினிக் (மரியதாஸ்)
(சகோதரன்)

5, ராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(44781)


# சாந்திகம் உளவளத் துணை நிலையம்

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தில் உளவியற் சான்றிதழ் அடிப்படைப் பயிற்சியைத் தொடர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக உளவளத் துணை நிலையத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சி சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்படும் என்றும் விரிவுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# அறவழி போராட்டக்குழு திட்டங்கள்

அறவழிப்போராட்டக்குழு கிராமியக் குழந்தைகள் பராமரிப்புத் திட்டம், சுவிஸ் திட்டம், ஆஸ்திரேலிய கல்வி உதவித் திட்டம், நியூசிலாந்துத் திட்டம் ஆகிய திட்டங்களை மீண்டும் செயல்படுத்த உள்ளதாகஅறவழிப்போராட்டக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-5)

# தற்காலிக கட்டடங்கள் அமைப்பு

கொழும்பு, ஜன. 20

இராணுவநடவடிக்கையால் இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியுள்ள மாணவர்கள் கல்வி பயில்வதற்கு வசதியாக தற்காலிக கட்டடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் நிதி உதவி வழங்கியுள்ளது.

16 தற்காலிக கட்டடங்களை அமைக்கும் திட்டம் ஒன்று இந்த அமைப்பால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இதே போன்று மற்றொரு திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்காக செயற்படுத்தப்பட்டுள்ளது. (உ-3)

# 3 மாதங்களாக சம்பளம் இல்லை

வடமராட்சி, ஜன. 20

யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் மதுவரித் திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை.

சிவில் நிர்வாகம் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் இவ்வேளையில், இத் திணைக்கள ஊழியர்களுக்கு உரிய காலத்தில் சம்பளம் வழங்கப்படாதது குறித்து அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

(உ-30-173)

# சுவாமி விவேகானந்தரின் யாழ். விஜய நூற்றாண்டு விழா

சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண வருகையின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்ப்பாணத்தில் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு விவேகானந்தரின் யாழ். விஜய நூற்றாண்டு ஞாபகார்த்த படிப்பகத்தை நல்லூர் பிரதேச சபையைச் சேர்ந்த திரு. சு. ஸ்ரீதரன் திறந்துவைப்பார்.

''சுவாமி விவேகானந்தரின் வருகையும் மறுமலர்ச்சியும்'' என்னும் நூல் யாழ். வலயம்-2 பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி. இராமநாதனால் வெளிட்டு வைக்கப்படும்.

நூலின் மதிப்பீட்டுரையையும், யாழ். வருகை நூற்றாண்டு தின உரையையும் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. வேதநாதனும், வெளியீட்டுரையை கவிஞர் காரை எம். பி. அருளானந்தமும் நிகழ்த்துவர்.

★ ★ ★

இராமகிருஷ்ணாலயத்துடன் இணைந்து யாழ். மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழு நடத்தும் விழா எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறும்.

மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இராமகிருஷ்ணாலய இயக்குநர் இ, ராஜா மகேந்திரசிங்கம், யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

தெய்வீக இசையரங்கும், இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ ★ ★

சண்டிலிப்பாய், ஜன. 20

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய இந்து மாமன்றம் நடத்தும் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழா இன்று முற்பகல் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. க. சத்தியதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா கலந்துகொள்வார். யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன், பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கம் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

(அ-135)


# வாழ்த்தி வரவேற்கிறோம்

மீண்டும் யாழ்ப்பாணத்தில்
கூட்டுறவு அபிவிருத்தியை முன்னெடுப்பதற்காக
யாழ். மாவட்டத்திற்கு
கூட்டுறவு உதவி ஆணையாளர்களாகப்
பதவி உயர்வு பெற்று வந்திருக்கும்

**திரு. எஸ். கே. சண்முகநாதன்**
அவர்கள் — (அபிவிருத்தி)

**திருமதி கோமளா திருநாவுக்கரசு**
அவர்கள் — (கணக்காய்வு)

**திரு. கா. பரநிருபசிங்கம்**
அவர்கள் — (பனை, தென்னை வள அபிவிருத்தி)

ஆகிய மூவரையும்

கூட்டுறவு வளம்பெற, நாடு நலம் பெற,
பணிசிறக்க வாழ்த்தி வரவேற்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்.
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

மல்லாகம்,
1997—01—19.

(சி/3958)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு பல கட்சிகளும் தயாராகுகின்றன

கொழும்பு, ஜன. 20

தெற்கில் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது கூட்டணியில் உள்ள கட்சித் தலைவர்களுடன் ஏற்கனவே பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

ஐக்கிய முன்னணியில் உள்ள கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் எத்தனை இடங்களை ஒதுக்குவது என்பது குறித்து ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பற்றி வீரக்கோன் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய (லலித்) முன்னணி இந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பான தனது உத்தி குறித்து இன்னமும் முடிவு செய்யவில்லை என்றும் —

நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்வது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர் இதுபற்றி முடிவு செய்யப்படும் என்றும் —

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து பொதுப் பட்டியலில் போட்டியிட அக்கட்சி இணங்கிவிட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பல முக்கியமான விடயங்கள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் —

இந்தத் தேர்தல்களில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து அடுத்த சில தினங்களுக்குள் இ. தொ. கா. முடிவு எடுக்கும் எனவும் —

அக்கட்சியின் எம். பியான எஸ். சதாசிவம் தெரிவித்தார்.

நியமனப் பத்திரங்கள் உத்தியோக பூர்வமாகக் கோரப்பட்ட பின்னர் வேட்பாளர்கள் குறித்து தமது கட்சி தீர்மானிக்கும் என்று முக்கிய எதிர்க்கட்சியான ஐ. தே. கவின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளை தெரிவித்தார்.

(உ- 5)

## அரசுத்தரப்புக் கட்சிகள் பொதுப்பட்டியலில் போட்டி

கொழும்பு, ஜன. 20

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இடம் பெற்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித்) பிரிவும் எதிர் வரும் உள்ளூராட்சித் தேர்தல்களின் போது சில இடங்களில் தனித்துப் போட்டியிடுவதில் பிடிவாதமாக இருந்த போதிலும் —

தற்போது அந்தப் பிடிவாதத்தைக் கைவிட்டு வடக்கு - கிழக்கு தவிர்ந்த சகல இடங்களிலும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் கீழ் பொதுப்பட்டியலில் போட்டியிடுவதற்கு இணங்கி விட்டன.

கொழும்புச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுப்பட்டியல் இன்னும் ஒரு வாரத்தில் வெளியாகும் என முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜயரத்ன தெரிவித்தார். (உ-150)

## சமாதானத் தீர்வுக்கு ஜப்பான் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 20

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜப்பான் தொடர்ந்து உதவ வேண்டுமெனில் நாட்டில் அமைதி நிலவ வேண்டியது அவசியமாகும். எனவே, இலங்கையின் இனப்பிரச்சனைக்கு விரைவில் சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும்,

இலங்கை — ஜப்பான் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு ஆலோசனைக் கூட்டம் தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு விளக்குமுகமாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகம் ஒழுங்கு செய்திருந்த பத்திரிகையாளர் சந்திப்பிலேயே ஜப்பானிய வெளி நாட்டமைச்சின் கொள்கைப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் மசாஹிகோ கொரியி மேற்கண்டவாறு தெரிவித்தார்,

நிதி, திட்டமிடல் பிரதியமைச்சர் ஜி. எல். பீரிஸின் அழைப்பையேற்று இலங்கை வந்த ஜப்பானியக் குழுவினர் இலங்கை நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி. சி. பெரேரா தலைமையிலான தூதுக் குழுவுடன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-5)

## கோபுர கலச அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 20

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மணிக்கோபுர திருப்பணிகள் பூர்த்தியாகி எதிர் வரும் தைப்பூச தினத்தன்று — 23 ஆம் திகதியன்று — கோபுர கலச அபிஷேகம் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் முகப்பு மண்டப அடிக்கல் நாட்டப்பட்டு இம்மண்டபத்திற்கான கட்டடப்பணிகளும் தொடரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்களின் கவனத்திற்கு

யாழ். பல்கலைக்கழக விவசாயபீட அனைத்து கல்வியாண்டு மாணவர்களையும் (புதுமுக மாணவர்களுட்பட) **22-01-97** புதன் மு. ப. **10** மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்றிற்காக தவறாது சமூகம் தருமாறு வேண்டுகின்றோம்.

**விவசாயபீட மாணவர் ஒன்றியம்.**

(9186)


## முதலாம் வருட நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பில் 12 — 02 — 1915



ஆண்டவன் அழைப்பில் 20 — 01 — 1996

### அமரர் எமடியூஸ் பிளேவியன்

அன்பின் தந்தையே
பாசப்பிணைப்பால் எமை வளர்த்து
நேசத்துடிப்பால் உயிர்காத்து
உள்ளம் என்ற கோயிலில் தனக்கென்று
காவியம் படைத்த நாயகனே!
நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு மாறாது
இப்பூமிதனில் அன்புக்காக வாழ்ந்தீர்
இறை அன்புக்காக மாண்டீர்
உங்கள் உடல் மண்ணில் புதைத்தாலும்
உங்கள் நினைவு மாறாது பப்பா
உங்கள் பிரிவு தாளாது பப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப்பூக்களால் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர், மச்சான், மச்சான், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**

532, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (44754)

## முதலாம் வருட நினைவஞ்சலி

### செல்வி பாக்கியம் சுப்பையா

**(இளைப்பாறிய ஆசிரியை - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மகளிர் பாடசாலை, உடுவில் மகளிர் பாடசாலை)**

ஆண்டவன் படைப்பில்: **29 - 06 - 1911**
ஆண்டவன் அழைப்பில்: **20 - 01 - 1996**

'' பூ அன்ரா மறைந்து ஒரு வருடம் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் மனதில் என்றும் இருக்கும் ''

**உங்களுடைய உறவினர் - குடும்பங்கள்**

தெல்லிப்பளை. (சி/3946)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA. TENDER NOTICE

Saled tenders will be received by me upto 10. a. m on **06 - 02 - 97** from contractors registered for civil Engineering works with ICTAD for the Repairs/Improvements to the Natural Science Block anp related structures.

Tender forms may be obtained from the works Engineer (Civil), University of Jaffna until 28-01-97 on producing Registration books and cash payment of the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit - Rs. 10, 000/-
2. Non-refundable deposit - Rs. 500/-

Tender forms may de seen by the tenderers at the Maintenance Branch of this University during office hours, if necessary.

**Registrar.**

University of Jaffna,
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna.

(C/3948)



## YOGI HOME SCIENCE ACADEMY

குறுகிய கால மனையியல் டிப்ளோமா பயிற்சிநெறி
**25 - 01 - 97 முதல் ஆரம்பமாகவுள்ளது.**

**கற்கை நெறிகள்:-**

★ இலகுமுறை தையல் பயிற்சி
★ கேக் ஐசிங்
★ பூக்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும்
★ துணியில் வர்ண அலங்கரிப்பு
★ மெசின் எம்ரோய்டறி
★ சமையற்கலை

**விசேட பயிற்சி வகுப்புகள்:**

1] முக ஒப்பனைகளும் தலை அலங்காரங்களும்.
2] மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் ( Fondant Icing )
3] மாச்சீனி மலர்கள் ( Sugar Craft )

வகுப்புகளில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:

**யாழ்நகரில்:-**
75, அம்மன் றோட்,
யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

**வடமராட்சியில்:-**
'பொன்மொழியார்கம்'
வதிரி, கரவெட்டி.
([illegible] Tutory அருகில்)

(44775)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**சொக்கன்** என்பவன் துணிவும் புத்தியும் உள்ள சிறுவன். அவன் இச்சங்கத்தினை வளர்த்திடுவேன் என்று சொல்லிச் சொல்லி எமது சங்கத்தின் வளர்ச்சிக்காக கடந்த பத்தாண்டுகளாக ஓடி ஓடி உழைத்த எம் உறுப்பினன்,

**அமரர்**
### இ. தனபாலசிங்கம் (சொக்கன்)

அவர்களது கால்கள் ஓட மறுத்து ஒரு நிலைப்பட்டு இறைபதம் ஏகிய **31**ஆம் நினைவு நாளாகிய இன்று நிறை கண்ணீருடன், நிலை தளர்ந்து நிற்கும் அவரது குடும்பத்தாருடன் இணைந்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!

**மறவன்புலோ**
**சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம்.**

20-1-1997 (44733)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவொளி -- அதிபர் அ. பொ. செல்லையா
## அகவை அறுபது குறித்த சிறப்புமலர்

## நேர்மையாளன்

நீதியையும் அறத்தையும் விரும்பிப் பிறர்க்கும், தமக்கும் பயன்படும் வண்ணம் வாழ்பவர்களை உலகம் என்றும் வாழ்த்தும். அத்தகைய வாழ்த்துக்குரிய பண்புடையவராக விளங்குபவர் அதிபர் திருவாளர் அ. பொ. செல்லையா அவர்கள். நெஞ்சுறுதியும், நேர்மைத்திறனும் மிக்க கல்வியாளனாக நீண்ட பணியாற்றி ஓய்வு பெறும் பெருந்தகை இவர். இவரது பல்துறை ஆற்றல்களையும், பண்பையும் பலர் வாயிலாக அறிந்ததோடு மட்டுமல்லாமல் நேரேயும் கண்டு மகிழும் வாய்ப்பு எமக்கு ஏற்பட்டது. இடம் பெயர்ந்து எமது துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினர் உசனில் வாழ்ந்து, இருப்பிடம் நோக்கி வரும் வேளை மூன்று தினங்கள் அ. பொ. செல்லையா தம்பதிகள் தங்கள் ''அறிவகம்'' இல்லத்தில் எம்மை உபசரித்து, இருத்தி மகிழ்வித்தபோது அவர்களது உயர் பண்பு கண்டு உவகையுற்றேன். பேரன்புக்குரிய அதிபர் செல்லையா அவர்கள் வள்ளுவப் பெருந்தகை சொன்ன

''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் — உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்''

என்ற வார்த்தைக்குரியவராக என்றும் எல்லோராலும் வாழ்த்தப்படுவார் என்பதில் ஐயம் இல்லை. மணிவிழாக் காணும் திரு. செல்லையா அவர்களை வாழ்த்தி, அவரது நற்பணி தொடர துர்க்கா தேவியை பிரார்த்தித்து ஆசி கூறி அமைகிறேன்.

சிவத்தமிழ்ச்செல்வி **தங்கம்மா அப்பாக்குட்டி**

## தமிழ் அபிமானி

தென்மராட்சி அன்னையின் தவப்புதல்வனான திரு. அ. பொ. செல்லையா அவர்கள் தமது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து சென்னை பச்சையப்பன் கல்லூரியில் உயர் கல்வியைப் பயின்று சென்னை பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். பின் தாய் நாடு திரும்பி ஆசிரியப் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தார். அதனைத் தொடர்ந்து அதிபராகி தாம் சேவையாற்றிய பாடசாலைகளில் தனது தலைமைத்துவ பண்பினாலும், கடின உழைப்பு, விடா முயற்சி ஆகியவற்றினாலும் இளம் தலை முறையினரை வளர்த்து, ஆளாக்கி சமூகத்தில் தலை சிறந்த ஆசானாக விளங்குகிறார்.

இவர் எல்லோரோடும் அன்பாகப் பழகும் சுபாவம் உடையவர்; சிறந்த எழுத்தாளன்; தமிழ் அபிமானம் உடையவர்; தான் நினைப்பதை எவ்வித தயக்கமுமின்றி வெளியாகத் தெரிவிப்பவர். சமூகப்பணியில் அவர் ஆற்றியவை ஏராளம். அவர் அரச பணியிலிருந்து இளைப்பாறினாலும் தமது இலட்சியப் பணியில் தொடர்ந்தும் உழைப்பார் என்பது எனது அசையாத நம்பிக்கை.

**பு. சுந்தரம்பிள்ளை**
(பிரதேச செயலர், தென்மராட்சி.)

## கலங்கரை விளக்கம்

**மானிடம் சொன்னீர்! மாண்பு மிகு மனிதர்கள் வாழ்க்கை சொன்னீர்!**
**பகுத்தறிவுரைத்தீர்! நல்ல பண்பாடு தனைப் புகன்றீர்!**
**கல்வியில் உயரச் செய்தீர்! நல்ல கலங்கரை விளக்குமானீர்!**
**தெள்ளு தமிழால் எங்கள் சிந்தைகள் இனிக்கச் செய்தீர்!**
**வாழ்க எம் அதிபர் பல்லாண்டு.**

**மாணவர்கள்**
(மீசாலை வீரசிங்கம் ம. வி.)

## வழிகாட்டி அவர்!

சாரணீயத்துறையில் பளை மகாவித்தியாலயம் ஜனாதிபதி விருது வரை பெற வழிகாட்டிய ''தருசின்னப் பயிற்சி'' பெற்ற முதல்வர் அ. பொ. செல்லையா அவர்களை வாழ்த்துகின்றேன்!

**மா. புவனேந்திரன்**
(மாவட்ட சாரணீய ஆணையாளர், கிளிநொச்சி)

## அதிபர் பெருந்தகை

தென்மராட்சிப் பிரதேசத்தில் தலைசிறந்த ஒரு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றிப் பல மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவிய அதிபர் பெருந்தகை அ. பொ. செல்லையா அவர்கள் கல்வித் துறையில் மட்டுமன்றி, கலைத்துறையிலும், சமூக மேம்பாட்டுத்துறையிலும் தொண்டாற்றியதை அறியாதார், அறியாதாரே!

இவர் பளை மத்திய கல்லூரியின் அதிபராகப் பல்லாண்டு சாலம் கடமை புரிந்து, அக்கல்லூரியின் இன்றைய தரவுயர்வுக்குச் சாரணகர்த்தாவாக இருந்தவர். மட்டுவில் கொத்தணி அதிபராகக் கடமை புரிந்த போது மட்டுவில் பிரதேச பாடசாலைகளின் மாணவரது கல்வி வளர்ச்சிக்காக பல மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தி வெற்றி கண்டவர்.

மனித நேயம் மிக்க இவர் தன் சக ஆசிரியர்களை சீரிய முறையில் வழிநடத்தி கல்வி நிறுவனங்களின் குறிக்கோளகளை நிறைவு செய்வதில் வல்லவர்; அதிபர் சமூகத்தில் சிறந்த உதாரண புருஷராகத் திகழ்ந்தவர்.

**இலங்கையர் கணேசன்**
(கோட்டக்கல்வி அலுவலர், தென்மராட்சி கல்விக் கோட்டம், சாவகச்சேரி)



## திருவாளர் அ. பொ. செல்லையா

B. Sc., Dip - in. Edu., S.L.P.S. Gr. I

| | |
|---|---|
| ஆசிரியப் பணி (17 - 01 - 61 முதல்) | கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி |
| | கொழும்பு கிறீன்லண்ட கல்லூரி |
| | கொழும்பு ஸாகிராக் கல்லூரி |
| | மட்டுவில் மகாவித்தியாலயம் |
| | சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி |
| | சாவகச்சேரி இந்துக்கல்லூரி |
| அதிபர் பணி (17 - 01 - 97 வரை) | பளை மகாவித்தியாலயம் |
| | மட்டுவில் மகாவித்தியாலயம் |
| | வீரசிங்கம் மகாவித்தியாலயம். |

## வள்ளன்மையாளன்

விஞ்ஞான பட்டதாரியாக, அறுபதுகளில், தமிழ் நாட்டிலிருந்து திரும்பியவர் திரு அ. பொ. செல்லையா அவர்கள். அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பகுத்தறிவு இயக்கத்தால் - குறிப்பாக, பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளால் கவரப்பட்டார். தாயகம் திரும்பி ஆசிரியப்பணியில் ஈடுபட்ட போதும், தமிழுரிமைக்காக மேடைகளில் முழக்கமிட்டார். இது தவிர, நாடகத் தயாரிப்பிலும் ஆர்வத்தோடு உழைத்தார். தாம் வரித்துக் கொண்ட கொள்கையினின்றும் பிறழாது அர்ப்பணிப்போடு தொண்டாற்றிய மிகச்சிலருள் ஒருவர் அ. பொ. செல்லையா.

''கேட்டிலும் உண்டோர் உறுதி, கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோள்'' என்பார் வள்ளுவர்.

நமக்குத் துன்பம் நேர்ந்த காலை யார் நமக்கு உதவ முன்வருகின்றார்களோ, அவர்களே உண்மை நண்பர், இனியர். வலிகாமம் பகுதியிலிருந்து ஓராண்டுக்கு முன் இலட்சக் கணக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆறுதலும், நிழலும், உணவும் தந்து ஆதரித்தவர்கள் தென்மராட்சி மக்கள். அந்த வள்ளன்மைக்கு ஒருவகை மாதிரியாக விளங்கியவர் அ. பொ. செல்லையா அவர்கள். கண்டி வீதியில், 187 ஆம் கட்டையில், மீசாலையில் இருந்த அவரது இல்லத்து 'அடையா நெடுங் கதவும்' அவரதும் அவர் துணைவியாரதும் விருந்தோம்பலும் மறக்கற்பாலன அல்ல. அ. பொ. செல்லையாவின் 'யோகம்' இருந்தவாறு.

இவ்வாதர்சத் தம்பதியர் சுற்றமும் கிளையும் சூழ பல்லாண்டு இனிது வாழ்க!

**சோ. பத்மநாதன்**
(அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)

## ஆளுமை மிக்கவர்

கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறுவர். ஆனால் எமது அதிபர் திரு. அ. பொ. செல்லையா அவர்கள் தான் சென்ற இடமெல்லாம் துலங்கச் செய்தவர். தான் பணிபுரிந்த பாடசாலைகள் அனைத்திலும் அழியா முத்திரை பதித்தவர். அவரது ஆளுமையானது, அவருடன் பணியாற்றிய ஏனையோருக்கு வழிகாட்டிய ஆற்றுப்படை. "கருமமே கண்ணாயினார் கண்துஞ்சார் மெய்வருத்தம் பாரார்" என்பது போலத் தனது அறிவு, சிந்தனை, செயல்கள், ஆற்றல் அனைத்தும் மாணவர் கல்வி விருத்தியை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டவர். கல்வித் துறையைப் பொறுத்தவரை பன்முகப்பட்ட ஆளுமை கொண்டவர்; நல்லாசான்; திறமை மிகு நிருவாகி; சிறந்த வழி காட்டி.

அர்ப்பணிப்பும் தன்னலமற்ற சேவையும் கொண்ட இவர் மாணவரது சமூகமயமாக்களிலும், ஆசிரியர் தம் ஆளுமை விருத்திகளை வளர்த்துக் கொள்ள உதவுவதிலும் மிருந்த அக்கறை கொண்டிருந்தவர். எமது வித்தியாலயத்தில் சொற்ப காலமே பணியாற்றி இருப்பினும் ஆசிரியர், மாணவர், நிர்வாக அணியினர் யாவரின் உள்ளங்களிலும் நிறைந்து நிற்கிறார்.

**ஆசிரியர்கள் - நிர்வாக அணியினர் -**
மீசாலை வீரசிங்கம் ம. வி.

**வெளியீடு: மீசாலை வீரசிங்கம் ம.வி.**

## பேரறிவாளன்

'' என்கடன் பணி செய்து கிடப்பதே ''என்ற அடியவர் வார்த்தையை இந்தக் கடமையாளன்ற்று கல்விப்பணி செய்தவர். நீண்டகாலமாக எம நிறுவனத்தின் சமூகப் பணிகளோடு தொடர்புற்ற பர் செல்லையா அவர்கள் மிகுந்த நாட்டுப் பற்றார். மரம் நடுகை, தமிழ் நூல்களைக் காத்தல் போன்பணிகளில் முன்னணியில் செயற்படுபவர். அறநூலி கொண்ட காதலால் 1969 இல் சாவகச்சேரியில் வருவருக்குச் சிலை எடுக்க முன்னின்றவர். பளை மகா தியாலயத்திலும் ஆற்றிய பின்னர் வீரசிங்கம் மகா தியாலயத்தில் இவர் ஆற்றிய பணிகள் யாவற்றையும்நரில் கண்டவன் யான்.

இடம்பெயர்ந்த வேளை இவ்வினிய மனின் இரக்க சுபாவங்களையும் கண்ணுற்றேன். அறிவிலூ இரக்கத்திலும், சமூக சீர்திருத்தப் பணிகளிலும் னித்துவம் பெற்று தென்மராட்சியில் விருட்சமாக விளும் அதிபர் செல்லையா அவர்கள் '' ஊருணி நீர் றந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு '' என்ற ள்ளுவர் நெறிக்கு பொருத்தமானவராகத் திகழ்ந்துருகிறார்.

**கலாநிதி. க. கனகராசா ஃ. பி.**
மில்க்வைற் நிறுவனம்.

## சீர்திருத்தவா

அதிபர் சேவையிலிருந்து ஓய்வுபெறும் திருளர் A.P. செல்லையா அவர்கள் கல்வி உலகில் 36 வடங்கள் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்து சேவையாற்றியுள்ளார். இவரது சேவையை யாழ். மாவட்டம்ன்கு உணரும். பாடசாலை மாணவனாக இநந்தபேத சிறந்த நடிகனாகப் பிரபல்யம் பெற்று பின் எழுத்தாளராகி இலக்கியத் துறையிலும் தன்னை இணைத்து கொண்டவர். அக்காலத்தில் தமிழ் முழங்கும் மேடைகள் அ. பொ. செ. இன் ஆற்றல் கண்டு மகிழக் கூடியதா இருந்தது. சமூக சீர்திருத்த சிந்தனையாளனாக செயட்டு பல பணிகள் ஆற்றிவரும் அ. பொ. செ. மக்கள் தன்மராட்சியை நோக்கி இடம் பெயர்ந்த வேளை பல ற்றுக்கணக்கான மக்களுக்கு ஆற்றிய சேவை இன்றும்ன்றியோடு போற்றத்தக்கது. இடம் பெயர்ந்த ஐந்து கல்விகோட்டங்களை தனது பாடசாலையில் இயங்க வைப்லும் வலிகாமப் பாடசாலைகள் தென்மராட்சியில் யங்குவதற்கும் அவர் ஆற்றிய பங்களிப்பை கல்வி உல என்றும் மறக்காது. அறுபது வயதிலும் அவரது தளர்லாப் பணி கண்டு வாழ்த்துகின்றேன். அவரும் அவர் தகுடும்பத்தவர்களும் நிறை மதியாய் என்றும் பிரகாசி வாழ்த்துகின்றேன்.

**சு. இரத்தினராசா**
(உடுவில் கல்விக் கோட்ட கல் அதிபதி)

## கல்விப் பணியாளன்

கல்விப்புலத்தின் ஆசிரியராகவும், அதிபகவும் பணி செய்து தனது 60 ஆவது வயதில் ஓய்வுபெம் திரு. அ. பொ. செல்லையா அவர்களைப் பாராட்டி ழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தனது சேவைக்காலம் முழுவதையும் கல்த்துறைக்கு அர்ப்பணித்து எமது இளம் சந்ததியினரை பாடசாலைகளில் வளர்த்தெடுத்த பெருமை இவருக்குண். இவரிடம் கல்வி கற்றுயர்ந்த பலரை நினைத்து இவர் மனநிறைவு கொள்ளலாம். தனக்கே உரித்தான தனித்வபாணியில் பாடசாலைகளைப் புதுப்பொலிவூட்டி வளர்தெடுக்கும் சிறப்பான ஆற்றல் இவருக்குண்டு.

இவரின் கல்விப்பணிக்கு நன்றி தெரிவிகும் அதே சமயம், நல்ல தேக சுகத்துடன் மனநிறைவு பற்று வாழ வேண்டுமென இவரை வாழ்த்துகிறேன்.

**இ. சிவானந்தன்**
(கல்விப்பணிப்பாளர், யாழ். லயம். 01)

## வாழ்த்துகின்றேம்

பளை மகா வித்தியாலயக் குடும்பத்தி அதிப அ. பொ. செல்லையா அவர்களின் ஆற்றல்மிகு மு கா மைத்துவத்தின் கீழ் ஆளாக்கப்பட்ட அதிர்கள் நாப அவரை வாழ்த்துகின்றோம்.

**அ. அலெக்சாண்டர்- அதிபர்.**
**கு. சிவானந்தம்- அதிபர்.**
**வி. கந்தசாமி- அதிபர்.**
**பு. ஸ்ரீவிக்னேஸ்வரன்- அதிபர்.**

## மதிப்புக்குரியவர்

எனது அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய மாணவ அ. பொ. செல்லையா அவர்களின் கல்விச் சேவையைப் பாராட்டுவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

அவரது கல்விப்பணி, சமூகப்பணி கடந் 36 வருடங்களுக்கு மேலாகக் காலத்தேவைக்கேற்ப சீரி சிந்தனையுடன் செயற்பட்டதை நான் நன்கு அறிவேன்.

அவரது ஆசிரியப்பணியும், பள்ளிக்கூட ர்வாக திறமையும் இளைய தலைமுறையினருக்கு ர் எடுத்துக் காட்டாகும்.

அவரது சேவை ஓய்வின் பின்னும் கல் உலகிற்கு பயனுள்ளதாக அமையும் என்ற நம்பிகையுடன் வாழ்த்தி மகிழ்கிறேன்.

பேராசிரியர் **வ. ஆறுகம்**
(யாழ். பல்கலைக்கழக கல்வியியற் புலத லைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையா அவர்களின்

பு மலர்

ான்

பதே '' என்ற அடி
யாளன் ஏற்று கல்
எமது நிறுவனத்
ற்ற அதிபர் செல்
பற்றாளர். மரம்
போன்ற பணிகளில்
ற நூலில் கொண்ட
ல் வள்ளுவருக்குச்
மகா வித்தியாலயத்
மகா வித்தியாலயத்
றையும் நேரில் கண்

ப மனிதரின் இரக்க
அறிவிலும், இரக்கத்
லும் தனித்துவம்
க விளங்கும் அதி
நீர் நிறைந்தற்றே
ன்ற வள்ளுவர்
கழ்ந்து வருகிறார்.
கராசா ஜே. பி.

## வாதி

றும் திருவாளர் A.P.
36 வருடங்கள் ஆசி
சேவையாற்றியுள்
வட்டம் நன்கு உண
ந்த போதே சிறந்த
ன் எழுத்தாளராகி
ணைத்துக் கொண்ட
மடைகளில் அ. பொ.
டியதாக இருந்தது.
செயற்பட்டு பல
மக்கள் தென்மராட்
பல நூற்றுக்கணக்
ன்றும் நன்றியோடு
து கல்விக் கோட்டங்
வைப்பதிலும் வலி
ட்சியில் இயங்குவதற்
வி உலகம் என்றும்
து தளர்விலாப் பணி
அவர் தம் குடும்பத்த
பிரகாசிக்க வாழ்த்து

னிராசா
ட்ட கல்வி அதிபதி)

## பாளன்

அதிபராகவும் பணி
ஓய்வுபெறும் திரு. அ.
ட்டி வாழ்த்துவதில்

யும் கல்வித்துறைக்கு
னரை பாடசாலை
ருக்குண்டு. இவரிடம்
இவர் மனநிறைவு
தனித்துவபாணியில்
வளர்த்தெடுக்கும்

தெரிவிக்கும் அதே
நிறைவு பெற்று வாழ
ன்.
ந்தன்
யாழ். வலயம். 01)

## றோம்

டும்பத்தில் அதிபர்
ஆற்றல் மிகு முகா
அதிபர்கள் நாம்

சாண்டர் — அதிபர்.
னந்தம் — அதிபர்.
ந்தசாமி — அதிபர்.
ஸ்வரன் — அதிபர்.

## பவர்

முரிய மாணவர்
கல்விச் சேவையைப்
கிறேன்.
கடந்த 36 வருடங்
ற்ப சீரிய சிந்தனை
அறிவேன்.
ரிக்கூட நிர்வாகத்
ருக்கு ஓர் எடுத்துக்

ம் கல்வி உலகிற்குப்
நம்பிக்கையுடன்

வ. ஆறுமுகம்
பற் புலத் தலைவர்)

## நல்லாசான்

உயர்வெல்லாம் தந்து
உறுதுணை பலவும் செய்து
ஆளுமை யாற்றல் காட்டி
அகத்தினில் ஆறுதல் தந்து
கருப்பொருளாய் உரை சொல்லி
கற்றோர் அவை காட்டி
உள்ளத்தில் என்றும் வாழும்
உளமார நாம் போற்றும்
நல்லாசான் நன்றிதனை
நாளெல்லாம் போற்றுவோம் யாம்.

**பு. ஸ்ரீவிக்கினேஸ்வரன்**
(அதிபர், பொன்னாலை
வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை)

## விடுமுறை மறந்தவர்

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபராக இருந்து சிறப்புப் பணியாற்றி இன்றுடன் ஓய்வு பெறும் எமது அன்புக்குரிய அதிபர் திருவாளர் அ. பொ. செல்லையா அவர்கள் தமிழ் நாட்டின், பச்சையப்பன் கல்லூரியில் பெற்ற அறிவு, அனுபவம் எமக்கும் வழிகாட்டியது. அறிஞர் அண்ணா தந்தை பெரியார் கொள்கை வழிவந்தவர்; தெய்வத்திலும் மேலாகக் கடமையை மதிப்பவர்; 24 மணி நேரமும் பாடசாலையின் சிந்தனை உடைவர்; விடுமுறை என்பதை மறந்தவர்; பொறுப்பெடுத்த பணியை செவ்வனே நிறைவேற்றுபவர் பளைப் பிரதேசத்தில் வீட்டுக்கொரு பட்டதாரி என்ற முத்திரையைப் பொறித்து மக்களின் நல்லபிமானத்தைப் பெற்றவர்.

எமது பாடசாலை வாழ்விலும் ஆசிரியர்களை ஊக்குவித்து மாணவர்களின் கல்வி, விளையாட்டு மற்றும் பிறதுறைகளிலும் நற்சாதனைகளைப் படைக்கக் காரணகர்த்தாவாக இருந்தவர். அவரும் அவர் குடும்பத்தவரும் இன்னும் பல காலம் சிறப்புடனும், உடல் நலனுடனும் வாழவும், மேலும் அவர்களது சமூகப் பணிகள் சிறக்கவும் மனமார வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சபையினர்**
**பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள்.**
(மீசாலை, வீரசிங்கம் ம. வி.)

## கடமை தவறாதவர்

காட்சிக்கு எளியனாய், சிரிக்கச்சொல்லும் இன் சொல்லால் எல்லோரையும் கவர்ந்து ஈரநெஞ்சோடு வாழ்ந்து கொண்டு இருப்பவர் எங்கள் மதிப்புக்கும், பெருமைக்குமுரிய அதிபர் அ. பொ. செல்லையா அவர்கள். பளை மகா வித்தியாலயத்தில் அவரது பாசறையில் வளர்ந்த ஆசிரியர்களில் நாமும் அடங்குவோம். தியாக உள்ளத்தோடு அவர் ஆற்றிய பணிகள், சாதனைகளை கல்வி உலகமும், நன்றிக் கடன்பட்ட மாணவ சமுதாயமும் என்றும் மறக்காது. சுத்த சைவ போசனம், தூய உடை, வீர நடை, காலம் தவறாத கடமை, எந்நேரமும் புதிய தேடலை நோக்கிய கற்றல் என அவரிடம் காணும் இயல்புகள் மற்றவர்கள் கற்பதற்குரியவை. அவரோடு கடமையாற்றிய காலங்களில் நாம் பெற்றவை ஏராளம்; ஏராளம். பளை மகா வித்தியாலய வரலாற்றில் அவரது காலம் 'பொற்காலம்' என போற்றப்படுகிறது. 'பளைக் குடும்பம்' எனக் கல்வியாளர்கள் எம்மை இன்றும் இனிது அழைக்கிறார்கள். பளைக் குடும்பப் பிதாவாக நின்று எம்மை வளர்த்தெடுத்த எம் நல்ல குருநாதரை நாம் எல்லோரும் என்றும் போற்றி வாழ்த்துகிறோம். அவரது சீரிய சிந்தனைகள், செயற்பாடுகள் எம்மை சீராக வழி நடத்துகின்றன.

**அன்புப் பிள்ளைகள்**
**ஸ்ரீ ஞானா**

## கலங்கரை விளக்கம்

பார்வைக்கு எளியவராகவும் இலட்சியத்தில் உறுதியானவராகவும் செயற்பட்டு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாட்டின் வழிதான் பொறுப்பேற்ற பாடசாலைகள் எல்லாவற்றையும் வளர்த்தவர் எங்கள் அதிபர் அ. பொ. செல்லையா அவர்கள். எமது பளைப் பிரதேசத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேல் அவர் அதிபராக — கொத்தணி அதிபராக — கடமையாற்றிய போது நாம் கண்ட கல்வி வளர்ச்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இவரது காலத்திலேயே முதன் முதலாக எமது பகுதியிலிருந்து — ஏன் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து — வைத்தியத்துறை, பொறியியல்துறை, முகாமைத்துவத் துறை, வர்த்தகத்துறை, கலைத்துறை என பல்வேறு துறைகளுக்கும் மாணவர்கள் அடுக்கடுக்காகப் பல்கலைக்கழகம் புகுந்தனர்.

சாரணீயத்திலும் சிறந்த விருதுகளைப் பெற்று மிளிர்ந்தவர். இவரது சேவைக் காலத்தில் மக்களுக்கு இனியவராகவும் மாணவர்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகவும் திகழ்ந்தார்.

**ம. குமாரவேலு**
(மரண விசாரணை அதிகாரியும்
சமாதான நீதிபதியும், பளை.)

(6ஆம் பக்கம் பார்க்க)

(விளம்பர இல. சி/3957)

# ஐ. நா. சபையை மறுசீரமைக்க புதிய செயலாளர் நாயகம் முடிவு

லண்டன், ஜன. 20

ஐக்கிய நாடுகள் சபையை மறுசீரமைக்கப் போவதாக அதன் புதிய செயலாளர் நாயகம் கோபி அனன் அறிவித்திருக்கிறார்.

புதிய செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தாம் வழங்கிய உறுதி மொழிகளைத் தாம் செயற்படுத்தப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு நடுப்பகுதியில் சீர்திருத்த திட்டங்கள் துரிதமாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

ஐ. நா. சபை அளவுக்கு அதிகமாகப் பெருத்து, செயலற்ற அதிகாரத்தனம் மிக்கதாகக் காணப்படுகின்றது என அங்கத்துவ நாடுகள் — குறிப்பாக அமெரிக்கா போன்றவை — குற்றம் சுமத்தி வருகின்றன.

இந்தப் பெயரை நீக்கி, ஐ. நாவின் 'இமேஜை' நிலை நிறுத்துவேன் என்று புதிய செயலாளர் நாயகம் கூறினார்.

ஐ. நா. சபைக்கு அமெரிக்கா செலுத்த வேண்டிய நிலுவைகளை செலுத்தும்படி அமெரிக்க காங்கிரசை வற்புறுத்துவதற்காகவும் —

ஐ. நா. சபைக்கு மேலதிக வளங்களைத் திரட்டிக் கொள்வதற்காகவும் —

கோபி அனன் நாளை மறுதினம் வாஷிங்டன் செல்லவிருக்கின்றார். (உ–3)

## உலக அரங்கில்

### ஹெப்ரோனில் அரபாத்

லண்டன், ஜன 20

சர்ச்சைக்குரிய ஹெப்ரோன் நகரம் பலஸ்தீனர்களிடம் கையளிக்கப்பட்ட பின்னர் பலஸ்தீனத் தலைவர் யாஸீர் அரபாத் நேற்று அந்நகருக்கு விஜயம் செய்ய இருந்தார்.

ஹெப்ரோன் நகர் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் அரபாத் அங்கு செல்வது இதுவே முதல்தடவையாகும்.

ஹெப்ரோனின் மத்திய பகுதியில் கணிசமான அளவு பிரதேசத்தில் மிகுந்த பாதுகாப்புடன் இஸ்ரேலியர்கள் நிலை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ)

### மக்கள் தொகை அதிகரிப்பு

புதுடில்லி, ஜன. 20

இந்தியாவின் மக்கள் தொகை நூறு கோடியை எட்டிக் கொண்டிருப்பதாக புதுடில்லியில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது மக்கள் தொகை 93 கோடி என்று அவர்கள் குறிப்பிட்டதாக இந்திய செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

நான்கு ஆண்டுகளின் பின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எடுக்கப்படும் போது இந்தியர்களின் எண்ணிக்கை நூறு கோடியைத் தாண்டி விடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (உ–3)

### பல்கேரியாவில் புதிய அதிபர் பதவியேற்பு

லண்டன், ஜன. 20

அரசியல், பொருளாதார கிளர்ச்சிகளுக்கு மத்தியில் பல்கேரியாவின் புதிய ஜனாதிபதியாக பெற்றோஸ் ஸ்டோயானோவ் (வயது 44) நேற்று பதவியேற்றார்.

பொதுத்தேர்தலை உடன் நடத்தக்கோரி எதிர்க்கட்சிகள் அங்கு தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

### வியாழன் கிரக சந்திரனில் உயிரினம்?

வாஷிங்டன், ஜன. 20

''யூப்பிற்றர்'' (வியாழன்) கிரகத்துக்குரிய சந்திரனில் உயிர் ஜீவராசிகள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## தானியங்கி பாக். விமானத்தை இந்தியா சுட்டு வீழ்த்தியது

புதுடில்லி, ஜன. 20

இந்தியாவின் ஆகாயப் பிராந்தியத்துக்குள் ஊடுருவிய பாகிஸ்தானின் தானியங்கி உளவு விமானம் இந்திய ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுட்டு வீழ்த்தப்பட்ட பாகிஸ்தான் விமானத்தின் சிதைவுகளை இந்திய விமானப்படை தேடி வருவதாகவும்—

விமானத்தை நோக்கிச் சுடப்பட்ட ஏவுகணையின் சில துண்டுகள் கண்டெடுக்கப்பட்ட போதிலும் இதுவரை விமானத்தின் சிதைவுகள் தென்படவில்லை என்றும்— தெரிவிக்கப்படுகின்றது.

மணற்பாங்கான பாதைகளும் குறுகலான மலைக் கணவாய்களும் தேடும் முயற்சிக்கு தடங்கலாக இருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

தொலைவிலிருந்து விமானி இல்லாமல் இயக்கப்படும் இந்த விமானத்தின் வீடியோப்படம் புதுடில்லிக்கு கொண்டு செல்லப்பட்டு நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (இ–5)

## கல்வீச்சுக்கு இலக்கானார் நேபாள காங்கிரஸ் தலைவர்

புதுடில்லி, ஜன. 20

நேபாளத்தில் ஐந்து நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான முக்கிய இடைத்தேர்தல்களுக்கான பிரசாரம் சூடு பிடித்திருக்கையில், பிரசாரத்துக்குச் சென்றிருந்த நேபாளத்தின் முன்னாள் பிரதமரும், ஆளும் நேபாள காங்கிரஸ் கட்சித் தலைவருமான கிரிஜா பிரசாத் கொய்ரலா கல்வீச்சுக்கு இலக்காகி காலில் படுகாயமடைந்தார்.

பொதுக் கூட்டம் ஒன்றில் பேசி முடித்த பின்னர் ஹெலிக்கொப்டர் ஒன்றில் ஏற முயன்ற சமயம் அவர் மீது பொதுமக்கள் சிலர் கல்வீச்சு நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

நேபாள நாடாளுமன்றத்தில் ஆளும் நேபாள காங்கிரஸுக்கு 85 ஆசனங்களும் எதிர்க்கட்சியான நேபாள கம்யூனிஸ்ட் கட்சிக்கு 87 ஆசனங்களும் உள்ளன. இந்த நிலையில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஐந்து தொகுதிகளில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தல்கள் மிகமுக்கியமானவையாக அமையப் போகின்றன. (உ)

## எண்ணெய்க் கப்பல்கள் வட கடலில் மோதின

லண்டன், ஜன. 20

வட கடலில் இரு பாரிய எண்ணெய்க் கப்பல்கள் மோதியதாக பிரிட்டிஷ் கடற்காவல் படை தெரிவித்துள்ளது.

ஒரு கப்பலில் இருந்து எண்ணெய் கசியத் தொடங்கியுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

கனத்த பனி மூட்டமே இந்த விபத்துக்கு காரணம் எனக் கூறப்பட்டது.

ஜோபர் துறைமுகத்தில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் இந்த எண்ணெய்க் கப்பல்கள் மோதிக் கொண்டன.

இதில் எவரும் காயமடையவில்லை.

எனினும் எண்ணெய் கசிவினால் கப்பலில் வெடிப்புக்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாக பிரெஞ்சு கடற்படை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (உ–3)

## 34 ஆவது நாளாக தொடரும் பெரு பணயக் கைதிகள் பிரச்சினை

லீமா, ஜன. 20

பெரு நாட்டின் பணயக் கைதிகள் நெருக்கடி 34 ஆவது நாளாகத் தொடர்கிறது.

பேச்சுவார்த்தைக் குழுவில் இணையுமாறு கனடாவுக்கு பெரு அழைப்பு விடுத்துள்ளது.

பேச்சுவார்த்தைக் குழுவில் பாப்பரசரின் வத்திக்கான் பிரதிநிதி ஒருவரும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவரும் இருக்க வேண்டும் என போராளிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் போராளிகள் மேலும் ஒரு பணயக் கைதியை விடுவித்துள்ளனர். பெருவின் தீவிரவாத எதிர்ப்புப் பொலிஸ் பிரிவின் தலைவர் லூயில் பொலன்டியா கிரானோவின் மோசமான உடல் நிலையைக் கருத்திற் கொண்டு போராளிகள் அவரை விடுவித்ததாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவித்தார்.

17 நாள்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட ஒரே ஒரு பணயக் கைதி இவரே ஆவார். இன்னும் 73 பேர் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர். (இ–10)

### ருவாண்டாவில் 6 பேர் பலி!

ருவாண்டாவின் வடக்கு நகரான ருவன்கெரியில் உள்ள தொண்டர் நிறுவன அலுவலகம் ஒன்றின் மீது ஹூட்டு இனக் கிளர்ச்சியாளர்கள் எனக் கருதப்படுவோர் நேற்று நடத்திய துப்பாக்கித்தாக்குதலில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலை முறியடிக்க முயன்ற ருவாண்டா படையினர் மூவரும், பிரான்ஸ் வைத்தியக் குழு பிரான்ஸ் தொண்டர் அமைப்பு, குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் உள்ளூர் அலுவலர்கள் மூவருமே உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் (புறொயிலர்) விற்பனைக்குண்டு. இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(44743)

ஐம்பது ரூபாவுக்கு விற்பனையாகும் ''அற்லஸ்'' மலிவு விலையில் இருபது ரூபா. தரமான சஞ்சிகைகள், பழைய நூல்கள் விற்பனைக்கு. ஜோஸ்யர் இரண்டாவது இதழ் வெளியாகியுள்ளது. ஜோஸ்யர், பழைய புத்தகக்கடை, 308, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (9181)

இறைச்சிக் கோழிகள் (புறொயிலர்) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
(44760)

### ஆங்கிலம்/சிங்களம்

அடிப்படை ஆங்கிலம் மாதாந்த பரீட்சைகள் உட்பட க. பொ. த. சா/த '97, ஆங்கிலம் பகல் 11.00 மணி வகுப்புகள் உடன் ஆரம்பமாகின்றன. சிங்களம் பகல் 10·00 மணி. T.சகாதேவன், இல. 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை.
(44694)

### கணித வகுப்புக்கள்

ஆண்டுகள் 8, 9, 10, 11 ற்கான கணித வகுப்புக்கள் பிரத்தியேகமாக நடைபெறுகின்றன. ஆசிரியர், க. அழகன், புகையிரத நிலைய வீதி, கோண்டாவில். (ஞானவீர சனசமூக நிலையம் முன்பாக)
(44751)

### தவறிவிட்டது

16-1-97 அன்று பருத்தித்துறை மரக்கறி சந்தையில் இரண்டு பவுண் தங்கச் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 77, கந்தவுடையார் ஒழுங்கை, புலோலி மேற்கு, பருத்தித்துறை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(44757)

எனது 441332289 V இலக்க தேசிய அடையாள அட்டை 15-1-97 இல் நல்லூர் கந்தசுவாமி கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். கந்தன் சின்னவன், முனிகோயிலடி, இருபாலை
(44764)

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி,
**சி. இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(44528)


ஓம் சாயிராம்

## ஐந்தாம் ஆண்டு நினைவு



மண்ணில்: 04 — 05 — 1915

விண்ணில்: 17 — 01 — 1992

### அமரர் P. M. இராசரத்தினம்

(ஒய்வுபெற்ற பதிவாளரும், மாவட்டக் காணிப் பதிவாளரும், தாவடி, ஸ்ரீ சத்ய சாயி நிலைய ஸ்தாபகர்)

**திதி: பூர்வபட்ஷ துவாதசி 20 - 01 - 97**

''பிறந்த உடனேயே சுடுகாட்டிற்குச் சவ ஊர்வலம் ஆரம்பிக்கிறது. ஹிருதயத்துடிப்புத்தான் அந்த இடத்திற்குச் செல்லும் ஊர்வலத்தில் மேளச் சத்தமாகும். சிலர் அதிகச் சுற்று வழியில் செல்கின்றனர். சிலர் சீக்கிரம் செல்லும் வழியிற் செல்கின்றனர். ஆனால் எல்லோரும் ஒரே இட த்திற்குத்தான் செல்கின்றனர்''.

- பாபா - அவதாரமொழியமுதம், பக்கம் 148

**திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

பிள்ளையார் கோயிலடி,
தாவடி. (9180)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் முத்துச்சாமி மகாலிங்கம்

(உரிமையாளர்:- வின்சிலோஸ் கராச், 149, மின்சார நிலைய வீதி, யாழ்.)

**அன்னையின் மடியில்: 24 — 03 — 1944**

**ஆண்டவன் அடியில்: 21 — 12 — 1996**

இன்முகத்தோடே குடும்பமதை காத்தே நின்று
இனிமையுடன் உபசரித்து கதைகள் பேசி
உன்னருமை அன்பதனால் உள்ளந்தேற்றி
உடல்பலவாம் உயிரொன்றாய் இணைந்தோம்
நாங்கள்
மின்னாமல் இடிதலைமேல் விழுந்தாற் போன்று
மிரண்டு விட்டோம் உன்பிரிவை மறக்கலாமோ!
கண்ணனவன் சொர்க்க வாயில் திருநாளன்று
கதறியழ எமைப்பிரிந்து எங்கு சென்றீர்.........?

உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல கண்ணனை வேண்டி கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் வாழ்வின் இறுதி நாள்களில் உதவிய இவர்களை எங்கள் நெஞ்சம் என்றும் மறவாது.

- யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள்.
- Asiri Hospital, Colombo வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள்.
- V. S. B. ஸ்தாபன பங்காளர்கள், ஊழியர்கள்.
- யாழ். தொலைத்தொடர்பு ஊழியர்கள்.

இன்று (20-01-1997) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளிலும், மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

**மனைவி, மக்கள், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள்.**

53, பெரியதம்பிரான் கோயில்வீதி,
வண். மேற்கு, யாழ்ப்பாணம். (9183)

பருத்தித்துறையில்

# பயணிகள் தரிப்பிட வசதி இன்றி பொதுமக்கள் பெரும் அவலம்

யாழ்ப்பாணம், ஜன. 20

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பயணிகள் தரிப்பிட வசதி இன்றி மக்கள் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் பிரதான பஸ் நிலையமான இந்த பஸ் நிலையம் வெட்டவெளியாகவே காட்சி அளிக்கின்றது.

பஸ் நிலையம் மீள செயற்படத் தொடங்கியும் எந்த வித புனரமைப்பு வேலையும் மேற்கொள்ளப்படாத நிலையில் விடப்பட்டுள்ளது.

காலை முதல் மாலை வரை இங்கிருந்து பஸ் போக்குவரத்து இடம் பெற்றுக் கொண்டிருந்தும் —

ஆயிரக் கணக்கான பயணிகள் தினசரி பயணங்களை மேற்கொண்டிருந்தும்— தங்குமிட வசதியின்றி பயணிகள் கொளுத்தும் வெயிலில்; குழந்தை குட்டிகளுடன் பல சிரமங்களை அனுபவித்தவாறே பயணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

மேலும் பிரதான பஸ் நிலையமான இந்த பஸ் நிலையத்தில் ஒரு நேரக்காப்பாளரோ, நேரக் காப்பாளர் அலுவலகமோ கிடையாது. (இ-15)

## அறிவொளி- அ. பொ. செல்லையா அவர்களின் சிறப்பிதழ் தொடர்ச்சி

# செம்மனச் செம்மல்

மானிலம் மனிதர்களால் நிரம்பியிருக்கிறது என்ற எண்ணமே பொதுமையானது. ஆயினும் மனிதனாய் வாழப்பழகிய இன்னுயிர்கள் சிலவே. செம்மனச் செம்மல் செல்லையா அவர்கள் மனிதனுக்குரிய பக்குவத்தோடு வாழ்பவர். அவரோடு கல்விப் பணியால் நீண்ட உறவு கொண்டவன் யான். தூய வெண் அங்கி தரித்த, துரித செயல் மன்னனைக் காணும் வாய்ப்பு கிளிநொச்சியில் யான் கடமையாற்றும் போது கிடைத்தது. உடை போல் உள்ளமும் வெள்ளையாய் உழைப்பும் உயரியதாய் இவரது சேவை பளைக் கொத்தணியை அலங்கரித்த சிறப்புக்கண்டு வியப்புற்றேன். ''பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்றவாக்கிற்கமைய ஏழைச் சிறார்களை புகழ் ஏணியில் ஏற்றி ஏற்றங்கண்ட ஏந்தல் இவர். பளை மகா வித்தியாலயத்திலிருந்து மருத்துவத்துறைக்கும், பொறியியற்துறைக்கும் மாணவர் போகலாம் என்பதை செயலுருப்படுத்திய செயல் வீரன். இத்தகைய பெருந்தகையின் மணி விழா அறிந்து மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

**திரு. கோ. சி. வேலாயுதம்,**
(முன்னாள் கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி).

# முத்தமிழ்க் கலைஞர்

அ. பொ. செ. அவர்கள் இளமை முதல் இன்று வரை சொல்லும், செயலும் ஒன்றென வாழ்ந்து காட்டும் இலக்கியச் சுடர். அவர் இளமையில் முழங்கிய இலட்சியக் கருத்துக்களினால் உருவாக்கப்பட்ட மாணவ மணிகள் இன்று உலகெங்கும் ஒளி விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பல்கலைச் செல்வர், முத்தமிழ்க் கலைஞர் எனும் விழிப்புக் கேற்ப இவரால் எழுதி மேடையேற்றப்பட்ட பல நாடகங்கள் புத்தக உருவிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. பல மேடைகளில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் இவரின் நேர் வழியையும், தூய்மையான சமுதாயப் பணியையும் கோடிட்டு இனம் காட்டும்.

நண்ப வாழ்க!

நண்பன் **வேலணை வீரசிங்கம்.**

# தலைநிமிர் அதிபர்

நல்லவன்; வல்லவன்; புரட்சியாளன்; கல்விப்பண்பாளன்; முகாமைத்துவ தீரன்; அறிஞர் அண்ணாவின் ஆத்மப்பிரியன்; மகாகவி பாரதியாரின் சாயலில் வார்த்தைகளை சொரிபவன்; வருவிருந்தோம்பி; நல்மாணாக்கன்: நல்லாசிரியன்; தலைநிமிர் அதிபர்; அஞ்சாநெஞ்சினன்; சார்ந்தோரின் அகல்விளக்கு; கண்ணியமிக்க குடும்பத் தலைவன்; விழாக்களுக்கு முன்னோடி; ஆடிக் கறப்பவன்; பாடிக் கறப்பவன்; தட்டிக் கேட்பவன்; எனது கல்லூரி நண்பன்; பல்கலைக்கழகங்களில் என்னுடன் பாங்குடன் கற்றவன்; கிளிநொச்சி மாவட்டத்தில் கலங்கரை விளக்கமாக பளை மகாவித்தியாலயத்தை ஒளிர வைத்த கொத்தணி அதிபர்; யாழ்ப்பாண மாவட்டத்திலும் எனது முன்னோடி கொத்தணி அதிபர்களுள் ஒருவர்; பாடசாலை பிரார்த்தனைக் கூட்டங்களில் வள்ளுவன் குறள்களை மாணவர் மூலம் ஒலிக்கச் செய்து சிந்தனைகளை தட்டி எழுப்பியவன்; டாக்டர் மு. வரதராசன், பேராசான் சஞ்சீவி போன்றவர் தமிழ் செய்த பாணியில் தமது நாவை அசைக்கும் பண்பினன்; சாவகச்சேரி இந்து, சென்னை பச்சையப்பன் கல்லூரி உலகுக்கு ஈய்ந்த சிம்மக் குரலோன் ... என்று தொடர்ந்தே மலர்களைத் தூவும் வகையில் தனது ஆளுமையை புரட்சி வகையில் வளர்த்த பெரியார். அ. பொ. செல்லையா தமது சேவையிலிருந்து இளைப்பாறுகிறார். அவர் தம் ஓய்வுக் காலத்தை கல்வியின்பால் செலவு செய்யவும், பத்திரிகைகளில் தமது கைவண்ணங்களை ஆக்கபூர்வமாகக் காண்பிக்கவும், மனைவி மக்களுடன் சுகதேகியாக வாழவும் எம்பெருமான் அவருக்கு அருள் சொரிய வாழ்த்துகின்றேன்.

**இரா. சுந்தரலிங்கம்**
(முன்னாள் வடமாநிலக் கல்வி அதிபதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தீர்வும் நம்பிக்கையும்

இலங்கையின் இனப்போர் அரசியல் தீர்வுடன் முடிவுக்கு வரும் என்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

போரை முதலில் நிறுத்தி அதன் பின்னர் அரசியல் தீர்வைக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துவது பிணக்குத் தீர்க்கும் மூலோபாயங்களில் ஒன்று. போரைத் தொடர்ந்த வண்ணம் அரசியல் தீர்வைக் கொண்டு வருவதன் மூலம் போரை முடிவுக்கு கொண்டு வருவது இரண்டாவது.

சர்வதேச ரீதியிலும், உள்நாடுகளின் மட்டத்திலும், பிணக்குகள், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அனேகமாக, மிகப் பல சந்தர்ப்பங்களில், மிகப் பல இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலைகளில், அமைதியைக் கொண்டுவருவதற்கு முதலாவது மூலோபாயமே கைக்கொள்ளப்படுவது உண்டு

போரைத் தொடர்ந்த வண்ணம் அரசியல் தீர்வு ஒன்றைக் கண்ட பின்னர் போரை நிறுத்தும் இரண்டாவது வழிமுறையை பலரும் விரும்புவதில்லை; பெரிதும் கைக்கொள்வதில்லை.

அதற்குக் காரணம் உண்டு. அரசியல் தீர்வு ஒன்றை அமுலாக்கி பிரச்சினையைத் தீர்க்கும் வரை போரினால் உண்டாகும் அழிவு—உயிர் உடைமைச் சேதங்கள் — பெருகி நாடுகளை, மக்களை அல்லது சம்பந்தப்பட்ட நாட்டை அங்கு வாழும் மக்களை, பாதிக்கும் என்பதாலேயே முதலாவது வழிமுறை அனேக சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுவதில்லை.

ஆனால் இலங்கையின் இப்போதைய அரசும் சரி, முந்திய அரசும் சரி, பிணக்குத் தீர்க்கும் மூலோபாயங்களில் இரண்டாவதையே தெரிவு செய்து நடைமுறைப் படுத்தியது; நடைமுறைப் படுத்துகிறது.

மக்கள் அழிவைப் பெருக்கி நாட்டைப் பல வழிகளாலும் நாசப்படுத்தும் இந்த மூலோபாயத்துக்கு போரினூடு சமாதானம் காணுதல் என்ற புதிய பெயரையும் இப்போதைய அரசு சூட்டியுள்ளது.

போரினூடு சமாதானத்தை அடைதல், அதாவது அரசியல் தீர்வைக் கொண்டு வந்து போரை முடித்தல் என்பது காலத்தை விழுங்கும் ஒரு காரியம் என்பதாலும் இரண்டாவது மூலோபாயம் அதிகம் விரும்பப் படுவதில்லை.

மேலும் அரசியல் தீர்வைக் கொண்டு வந்து போரை முடிவுக்கு வரச் செய்யும் உபாயம் வெற்றி தருவதற்கு, பாதிக்கப்பட்ட மக்கள் அதனை ஆதரிப்பது அவசியம்.

அந்த வகையில் பொ.ஐ.மு. அரசின் அதிகாரப் பரவல் திட்டம், தமிழ், முஸ்லிம் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதாக அமையுமா என்பதனைத் திட்டவட்டமாகக் கூறும் விதத்தில் அது இன்னும் உரிய இறுதி வடிவம் பெறவில்லை; உண்மையான தோற்றம் தெரியவில்லை.

ஆகையால் எதனை மையமாக வைத்து அரசியல் தீர்வுடன் இனப்போர் முடிவுக்கு வரும் என்று ஜனாதிபதி கூறினார் என்பது விளக்கமில்லை.

---

### இனப்பிரச்சினை விவகாரத்தில்

# அரசுக்கும் ஐ. தே. கவுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட வாய்ப்பில்லை

கொழும்பு, ஜன. 20

''அடுத்த இரண்டு மாதங்களில் இனப்பிரச்சினை விவகாரத்தில் என்ன நடக்கும் என்று கூறமுடியாது.''

''இதுவரை நடந்த விடயங்களைப் பார்க்கும் போது பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கும், ஐ.தே. கவுக்கும் இடையில் கருத்துடன்பாடு உருவாகுவது கஷ்டமான விடயம் என்றே கூறப்படுகின்றது.'' — இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

ஐ. தே. கவின் சுசில் முனசிங்க தலைமையிலான பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்பில் இருந்து ஒற்றையாட்சி முறை நீக்கப்படக் கூடாது என்று குரலெழுப்பி வருகிறார்கள்.

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு ஆதரவான ஐ.தே.க. உயர் தலைவர்களும் வாய் திறந் எதுவித கருத்தும் கூறாமல் மௌனம் சாதிக்கிறார்கள். எதிர் காலத்திலும் அவர்கள் இப்படியே மௌனம் சாதிக்கத்தான் போகிறார்கள்.

ஒற்றையாட்சிக்கு எதிராக புதிய யோசனைகள் அமைகின்றன என்று கூறி அதனை ஐ.தே. க. ஆதரிக்காவிட்டாலும் அரசு இந்த யோசனைகளை நாடாளுமன்றத்தில் நிச்சயம் சமர்ப்பிக்கவிருக்கிறது. சிறுபான்மைக் கட்சிகளின் நிலைப்பாட்டை அறிய இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்றும் அரசு கருதுகின்றது.

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனை தோல்வி கண்டாலும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நஷ்டம் ஏதும் ஏற்படப்போவதில்லை. சிறுபான்மை மக்களின் பிரச்சினையைத் தீர்க்க நான் உண்மையில் மன உறுதியுடன் செயற்பட்டேன் என்பதைச் சர்வதேசச் சமூகத்துக்குக் காட்ட இது ஒரு வாய்ப்பாக அவருக்கு அமைந்ததே அவரைப் பொறுத்தவரை போதுமானது — இப்படி அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ-3-150)

## அரசு -- ஐ. தே. கட்சி -- புலிகள் முத்தரப்பு பேச்சு அவசியம்

### சமாதான சபை கோரிக்கை

இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று தேசிய சமாதான சபை மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் ஐ. தே. கவும் சமாதான நடவடிக்கையில் அக்கறையோடு பங்கு கொள்ள வேண்டும் என்றும் அந்த அமைப்பு கேட்டுள்ளது.

தேசிய சமாதான சபை இது தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அரசாங்கம், ஐ. தே. க., விடுதலைப் புலிகள் ஆகிய முத்தரப்பினரும் இந்த சமாதான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (உ-3)

### தீர்வுத்திட்டம் முன்னெடுக்கப்படும்

# எதிர்ப்புக்களை கண்டு பின்வாங்க மாட்டோம்!

### ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 20

'' எதிர்ப்புக்களைக் கண்டு பின்வாங்கிவிடப் போவதில்லை; அரசியல் தீர்வுக்கான யோசனைகள் திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தப்படும்'' — இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

பலாங்கொடையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசாங்கம் முன்வைத்திருக்கும் அரசியல் தீர்வு யோசனைகள் திட்டமிட்டபடி நிறைவேற்றப்படும்.

சில பத்திரிகைகளும், தனிநபர்களும், மதகுருமார் சிலரும் அரசியல் தீர்வுயோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அதற்காக எமது நடவடிக்கைகளை நிறுத்திவிடமுடியாது — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

## பாடசாலைகள் இடமாற்ற சபை தலைவர் திடீர் பதவி நீக்கம்

கொழும்பு, ஜன. 20

தேசிய பாடசாலைகள் இடமாற்ற சபைத் தலைவர் எஸ். ஜி. எஸ். நிஸங்க கடந்த வெள்ளியன்று அப்பதவியிலிருந்து திடீரென நீக்கப்பட்டார்.

ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பாக தத்தமது பிரதேச அதிபர்கள் ஊடாக அரசியல்வாதிகள் கொடுத்து வந்த அழுத்தங்களுக்கு அவர் இடம் கொடுக்காததால் அரசியல் பழிவாங்கலுக்கு அவர் இலக்காகிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றார் என ஆசிரிய தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

தேசியப் பாடசாலைகளில் நீண்ட காலமாகக் கற்பித்து வரும் ஆசிரியர்கள் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றியதே இல்லை என்றும் —

கஷ்டப் பிரதேசத்தில் பணியாற்ற அவர்களுக்கு விடுக்கப்பட்ட உத்தரவுகளை சந்தடியின்றி ரத்துச் செய்யும் நடவடிக்கைகளுக்கு நிஸங்க ஒத்துழைத்தார் என்றும் மற்றொரு கருத்தும் தெரிவிக்கப் ட்டது. (உ- 150)

## கருத்து பேதங்களை ஏற்படுத்த சில தீயசக்திகள் முயற்சி

### பௌத்த குருமார் சங்கம் அறிக்கை

கொழும்பு, ஜன. 20

''அரசாங்கத்துக்கும் பௌத்த மத குருமாருக்கும் இடையே கருத்து பேதங்களை உருவாக்குவதில் சில தீய சக்திகள் ஈடுபட்டிருக்கின்றன''

அகில இலங்கை பௌத்த குருமார் சங்கம் மேற்கண்டவாறு அறிக்கை ஒன்றில்தெரிவித்திருக்கிறது.

இதேசமயம் அஸ்கிரிய, மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்களும் ஏனைய சில பிக்குமார்களும் பௌத்த சாசன அமைச்சின் அதியுயர் ஆலோசனைச் சபையிலிருந்து இராஜினாமாச் செய்திருக்கிறார்கள். 'இவர்களது நடவடிக்கை தனிப்பட்ட விடயம். இதில் அரசியல் நோக்கம் கிடையாது என்று அகில இலங்கை பௌத்த குருமார் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மகாநாயக்க தேரர்களின் இராஜினாமாவை அரசாங்கத்துக்கு எதிராக வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட ஒரு சீர்குலைவு நடவடிக்கை என்று சித்திரித்துக் காட்டுவதற்குச் சில சமூக விரோத சக்திகள் முயன்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (இ-4)

### நாளை

தை 8

செவ்வாய்க்கிழமை

திதி: திரயோதசி மாலை 6. 10 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை காலை 6.22 வரை.

பிரதோஷ விரதம்

ராகுகாலம்: 3.35-5.05

சுபநேரம்: 11.05 12.35

(பஞ்சாங்கம் இரவுக்கும் பழைய நேரப்படி)

## வடமராட்சியில் நேற்று சூட்டுக்கு இருவர் பலி

யாழ்ப்பாணம், ஜன. 20

வடமராட்சிப் பகுதியில் இருவேறு இடங்களில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்தனர்.

முள்ளி என்ற இடத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி புலோலி கிழக்கைச் சேர்ந்த இராசலிங்கம் கிருஷ்ணலிங்கம் (வயது 43) என்பவர் மரணமானார்.

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதிப் பகுதியில் வீட்டில் இருந்த கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் (வயது 48) என்பவர் இனந் தெரியாத நபரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். மாலை 6.30 மணிக்கு இச் சம்பவம் இடம் பெற்றது.

உயிரிழந்தவர் பருத்தித் துறை பஸ் டிப்போ பாது காவலராவார்.

இருவரது சடலங்களும் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டன.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியின் உத்தரவின் பேரில் உடுப்பிட்டிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி வீ. நடராசா இவர்களது மரணம் தொடர்பான விசாரணைகளை நேற்று நடத்தினார்.

கிருஷ்ணலிங்கம் என்பவரது மரண விசாரணையின் போது சாட்சியமளித்த இராணுவத்தினர் —

மேற்படிநபரை பரிசோதனைக்குட்படுத்திய வேளை, அவர் இராணுவத்தின் துப்பாக்கியைப் பிடித்து இழுத்து தாக்க முற்பட்டதாகவும் அப்போது அவரைச் சுட்டதாகவும் தெரிவித்தனர்.

சாட்சியத்தை அடுத்து தவிர்க்க முடியாத காரணத்தால் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார் என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

மரணமானவர் ஒரு மன நோயாளி எனவும் தெரிவிக்கப்பட்டது.

தீர்ப்பினை அடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து கிருஷ்ணகுமார் என்பவரது மரணம் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மரணமானவரின் தாயார் சாட்சியமளித்தார்.

சம்பவம் இடம்பெற்ற வேளை வீட்டு விறாந்தையில் இருந்த தனது மகன் நாய் குரைத்த சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த போது வீதியில் இருந்து யாரோ இனந் தெரியாத நபர் அவரைச் சுட்டதாகத் தெரிவித்தார்.

இறந்தவரின் இடது பக்க மார்பிலும், காலிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன

சாட்சியத்தை தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டினால் மரணமானதாகத் தீர்ப்பளித்த மரண விசாரணை அதிகாரி, சுட்டவர்களை இனங்காணும் வரை தொடர்ந்து விசாரணையை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

சாட்சியத்தைப் பருத்தித்துறைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

தீர்ப்பினை அடுத்து சடலம் தாயாரிடம் கையளிக்கப்பட்டது. (உ-15)

---

### சமய நிகழ்வுகளில்

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய மணவாளக் கோல வைபவம் இன்று காலை 7 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. மாலை 3 மணிக்கு திருவூஞ்சல் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதலும் இடம் பெறும். (உ-28)

★ ★ ★

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த தை குளிர்த்தி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

இறுதி நாளான எதிர்வரும் சனிக்கிழமை விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்று குளிர்த்தித் திருவிழா நடைபெறவுள்ளது. [அ-12]

## மாணவன் காயம்

தென்மராட்சி, ஜன. 20

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் ரியூசனுக்குச் சென்ற பாடசாலை மாணவன் படுகாயமடைந்தார்.

சங்கத்தானையைச் சேர்ந்த பரமநாதன் பார்த்தீபன் (வயது 15) என்பவரே காயமடைந்தவராவார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். [உ-117-31]

## பாலர் பாடசாலை

வடமராட்சி, ஜன. 20

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தினால் வடமராட்சி றோட்டறக்ட் கழகத்தின் ஆதரவுடன் பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவில் பாலர் பாடசாலை ஒன்று இம்மாதம் 23 ஆம் திகதி — தைப்பூசத் தினத்தன்று — ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (உ-173)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமானம் குறித்து படை அதிகாரிகளுக்கு பரீட்சை

கொழும்பு, ஜன. 20

பதவி உயர்வு கோரும் படையதிகாரிகளும், புதிதாக படைகளில் சேரும் படையினரும் சர்வதேச மனிதாபிமான சட்டம் குறித்த பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பற்றிய அறிவை வளர்த்தல், சிறைக் கைதிகள் மற்றும் பொதுமக்களை சித்திரவதைக்கு உட்படுத்துவதைத் தவிர்த்தல் போன்ற விடயங்கள் குறித்து படையினருக்கு விளக்கும் வகையில் இந்தப் பரீட்சை நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

# மார்ச் மாத இறுதியில் உள்ளூராட்சி தேர்தல்?

கொழும்பு, ஜன. 20

உள்ளூராட்சித் தேர்தலை நடத்த மார்ச் மாத இறுதியில் நல்லநாள் ஒன்றை அரசு தெரிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, இளைஞர் விவகார அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க ஆகியோர் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் இது பற்றி முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொது வேட்பாளர் இறுதிப்பட்டியல் உடனடியாகத் தயாராகிவிட வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கும் 15 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யக் கூடியதாக கால எல்லை ஒன்று அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உள்ளூராட்சித் தேர்தல்கள் பற்றிய மற்றும் சில செய்திகள் 3 ஆம் பக்கத்தில்)

(உ-3-150)

## மரணதண்டனை

யாழ்ப்பாணம், ஜன. 20

கொக்குவில் பகுதியில் கடந்த வியாழக்கிழமை உதயகுமார் என்ற வர்த்தகருக்கு விடுதலைப் புலிகள் மரண தண்டனை நிறைவேற்றிய சம்பவம் குறித்து மேலதிக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு வைத்து தேசத் துரோகச் செயல்களில் ஈடுபட்டமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டது. —என்று கூறப்படும் அட்டை சடலத்துக்கு அருகில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## மேஜர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யக 51 ஆவது படையணியின் தளபதியாவார்.

சிரேஷ்ட கேணல் ஒருவர் இக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தரைத் தொடர்புடைய வெற்றிலைக்கேணி, ஆனையிறவு, கிளிநொச்சி போன்ற முகாம்களை விடுதலைப் புலிகள் தாக்கலாம் என்று மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா முன்கூட்டியே எச்சரித்திருந்த போதும் அந்த எச்சரிக்கை கவனத்தில் எடுக்கப்படாமை குறித்தும் —

கிளிநொச்சியைத் தனிமைப்படுத்தும் வகையில் எப்படி விடுதலைப் புலிகள் பரந்தனுக்குள் ஊடுருவினார்கள் என்பது குறித்தும் —

இந்த விசாரணைக்குழு ஆராயும் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. (உ-3-150)

## குஜ்ரால்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுவது பற்றிய பிரச்சினையை இந்திய மத்திய அரசு உணர்ந்தே உள்ளது.

இது தவிர, இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் உள்ளன.

அவை குறித்து தமது இலங்கை விஜயத்தின் போது வெளியுறவுத் துறை அமைச்சர் குஜ்ரால் இலங்கை அரசுடன் விவாதிப்பார். — என்று மேலும் கூறினார் தேவகௌடா. (உ)

# வழக்கு தாக்கல் செய்ய முஸ்தீபு

கொழும்பு, ஜன. 20

அதிகாரப்பகிர்வு தொடர்பான தனது தீர்வு யோசனைகளை அரசு நாடாளுமன்றத்திடம் சமர்ப்பித்து நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப் பெறாமல், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்கள் முன் வைக்க முயற்சி எடுக்கப்படுமானால் அதைத் தடுப்பதற்கு நீதிமன்றத்துக்குச் செல்வோம்.

ஸ்ரீலங்கா ஒருமைப்பாட்டு இயக்கம் என்ற தென்னிலங்கை அமைப்பு ஒன்று இவ்வாறு அறிவித்திருக்கின்றது.

(உ-150)

## தலையிட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சனையை மோசமாக்கியது இந்தியாதான். ஆகவே அதனைத் தீர்க்க இந்தியாவே உதவவேண்டும்.

விடுதலைப்புலிகளை நசுக்க எல்லா ஆதரவையும் தருவதன் மூலம் இதனைச் செய்யலாம். அதனைச் செய்யாமல், வடக்கு - கிழக்கில் ஜனநாயகம் நிலவவேண்டும்; அதிகாரப் பரவலாக்கல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றெல்லாம் கூறுவதில் பிரயோசனம் இல்லை.

அமைதியான சுபாபம் உள்ளவர் குஜ்ரால். இந்திய பாதுகாப்பு அமைச்சிலோ, உளவு நிறுவனமான 'றோ' விலோ அவருக்கு செல்வாக்கு இல்லை. அவற்றுடன் சந்தோஷமான நிலையிலும் அவர் இல்லை.

பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் புதிய நட்புறவு ஒப்பந்தம் ஏற்பட வேண்டும்.

இந்த ஒப்பந்தம் தொடர்பான நகல் ஏற்கனவே இந்தியாவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தலையிடப் போவதில்லை என்று கூறுவது மட்டும் போதாது. ஒரு முறை இந்தியா தலையிட்டது. அதனை ஈடு செய்ய புதிய நட்புறவு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் — இப்படி அந்தப்பத்திரிகை தெரிவித்தது. (உ-3-150)

## சந்திரிகா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராகப் பணியாற்றுவார்.

இரு தரப்பு ஒத்துழைப்புக் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படும்.

இன்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருடன் குஜ்ரால் பேச்சு நடத்துவார்.

குஜ்ரால் இன்று பிற்பகல் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ''இந்திய வெளிநாட்டுக் கொள்கை'' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

(உ-3)

# கார் விற்பனை முகவர்கள் நாடாளுமன்றுக்கு படையெடுப்பு!

கொழும்பு, ஜன. 20

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற கார் அல்லது ஜீப் இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியையடுத்து கார் விற்பனை முகவர் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலர் நாடாளுமன்றத்துக்கு படை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் நாடாளுமன்றப் பகுதியில் பாதுகாப்பு வழங்கும் அதிகாரிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 ஆயிரத்து 500 அமெரிக்க டொலருக்கு (சுமார் 16 லட்சம் ரூபாவுக்கு) மேற்படாத தொகைக்கு கார் அல்லது ஜீப் — ஏதாவது ஒன்றை — வெளிநாட்டில் இருந்து தீர்வையின்றி இறக்குமதி செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதனையடுத்து —

கொழும்பில் உள்ள கார் விற்பனை முகவர்கள் நாடாளுமன்றத்துக்கு படையெடுத்து தமது நிறுவன கார்களைக் காட்டி அதைக் கொள்வனவு செய்யுமாறு எம். பிக்களை வற்புறுத்தி வருகின்றார்களாம்.

இவ்வாறு ஏராளமானவர்கள் நாடாளுமன்றத்துக்கு படை எடுப்பதால் அங்கு பாதுகாப்பு அதிகாரிகள் பெரும் திண்டாட்டம் அடைகின்றனர் என்று கூறப்படுகிறது.

அதேவேளை —

நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து கார் இறக்குமதி செய்வதற்கான அவர்களின் 'பெர்மிட்டை' பெறவும் பலத்த போட்டி நிலவுகிறதாம். தற்போது 11 லட்சம் ரூபாவுக்கு இந்த பெர்மிட்டுக்கள் விலை பேசப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

(உ-150-3)

மதுரையில் நடக்கவிருந்த

# ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டுக்குத் தடை!

மணிலா, ஜன. 20

நேற்று மதுரையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நடக்க விருந்த தமிழர் எச்சரிக்கை மாநாடு திடீரென ரத்துச் செய்யப்பட்டது.

மாநாட்டுக்கு முதலில் அனுமதியளித்த தமிழக காவல்துறையினர் திடீரென தமது உத்தரவை ரத்துச் செய்து விட்டதாக அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அகில இந்திய ரீதியில் முக்கிய தலைவர்களான ஜோர்ஜ் பெர்னாண்டஸ், கிருஷ்ண ஐயர்உட்பட இந்தியாவின் 35 கட்சி மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள விருந்தனர்.

மாநாடு தடை செய்யப்பட்டமை அடிப்படைப்பேச்சு உரிமையை மறுக்கும் ஜனநாயகப் படுகொலை நடவடிக்கை ஆகும் என்று மாநாட்டு அமைப்பாளர் நெடுமாறன் தெரிவித்தார்.

அடுத்த கட்டத் தொடர் நடவடிக்கை குறித்து தமிழ் ஈழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு கூடி முடிவு எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-3)

# கொழும்பைப் பார்க்க முடியாது திரும்பிய ஐ, நா. அதிகாரிகள்

கண்டியில் நடந்த — ஐ.நா. உப அமைப்பு நிறுவனம் ஒன்றின் — சர்வதேச மாநாட்டில் பங்குபற்றுவதற்கு வந்த ஐ. நா. அமைப்பு அதிகாரிகள் கொழும்பு நகரைச் சுற்றிப் பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது

இந்த அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேரடியாக கண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாநாடு முடிந்ததும் அவர்கள் கொழும்பு நகரைப் பார்க்க விரும்பினர்.

கொழும்புக்குச் செல்வது பாதுகாப்புக்கு ஆபத்து என்று அவர்களுக்கு தெரிவித்த இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகள், அவர்களை கண்டியில் இருந்து நேரடியாக கட்டுநாயக்காவுக்கு அழைத்துச் சென்று விமானத்தில் ஏற்றி அனுப்பி வைத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது (உ-3-150)

## கட்டாக்காலி நாய்கள் பிடிப்பு

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் நடவடிக்கை யாழ். மாநகரசபையினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பிடிக்கப்படும் நாய்கள் முன்னர் போன்று கடலில் தள்ளிக் கொல்லப்படுவதில்லை என்றும் யாழ்ப்பாணம் கிட்டங்கியில் அவை கொல்லப்பட்டு குழி தோண்டிப் புதைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)


நாடகம் எழுதுவது எப்படி?

என்று விளக்கிக் கூறுகின்ற முதலாவது தமிழ் நூல்
நாடகங்கள் பற்றிய பல செய்திகளைக் கூறுவது.

250 நாடகங்கள் எழுதிய
அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை
எழுதியது

நாடக ஆர்வலர்கள் மாணவர்கள் எல்லோரும்
வாசிக்கவேண்டிய நூல்.

யாழ். நகரில் எங்கும் கிடைக்கும். விலை ரூபா 50-00
(44772)





மீண்டும் இன்று 20-01-1997 முதல்

★★ சோபிகா நகையகம் ★★



இல. 223 (111), கஸ்தூரியார் வீதியில்

ஆரம்பிக்கப்படுகிறதென்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

★ தரமான 22 கரட் தங்க நகைகளை ஓடர்செய்து பெற்றுக் கொள்ளவும்,
★ நகைகளுக்குப் பதிக்கும் சகலவிதமான இரத்தினக்கற்களை பெற்றுக்கொள்ளவும்

சிறந்த ஸ்தாபனம் சோபிகா நகையகம். இல. 223, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (44780)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் [illegible] யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20 – 01 – 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.